**Signature and Name of Invigilator**

1. (Signature) ____________________

   (Name) ____________________

2. (Signature) ____________________

   (Name) ____________________

**OMR Sheet No. :** ....................................................
(To be filled by the Candidate)

**Roll No.** | | | | | | | | |
(In figures as per admission card)

**Roll No.** ____________________
(In words)

**N 0 2 6 1 7**

# PAPER - II
# TAMIL

**Time : 1¼ hours]** **[Maximum Marks : 100**

Number of Pages in this Booklet : **16** Number of Questions in this Booklet : **50**

## Instructions for the Candidates

1. Write your roll number in the space provided on the top of this page.
2. This paper consists of fifty multiple-choice type of questions.
3. At the commencement of examination, the question booklet will be given to you. In the first 5 minutes, you are requested to open the booklet and compulsorily examine it as below :
   (i) To have access to the Question Booklet, tear off the paper seal on the edge of this cover page. Do not accept a booklet without sticker-seal and do not accept an open booklet.
   (ii) **Tally the number of pages and number of questions in the booklet with the information printed on the cover page. Faulty booklets due to pages/questions missing or duplicate or not in serial order or any other discrepancy should be got replaced immediately by a correct booklet from the invigilator within the period of 5 minutes. Afterwards, neither the Question Booklet will be replaced nor any extra time will be given.**
   (iii) After this verification is over, the Test Booklet Number should be entered on the OMR Sheet and the OMR Sheet Number should be entered on this Test Booklet.
4. Each item has four alternative responses marked (1), (2), (3) and (4). You have to darken the circle as indicated below on the correct response against each item.

   **Example :** ① ② ● ④ where (3) is the correct response.
5. Your responses to the items are to be indicated in the **OMR Sheet given inside the Booklet only.** If you mark your response at any place other than in the circle in the OMR Sheet, it will not be evaluated.
6. Read instructions given inside carefully.
7. Rough Work is to be done in the end of this booklet.
8. If you write your Name, Roll Number, Phone Number or put any mark on any part of the OMR Sheet, except for the space allotted for the relevant entries, which may disclose your identity, or use abusive language or employ any other unfair means, such as change of response by scratching or using white fluid, you will render yourself liable to disqualification.
9. You have to return the original OMR Sheet to the invigilators at the end of the examination compulsorily and must not carry it with you outside the Examination Hall. You are however, allowed to carry original question booklet and duplicate copy of OMR Sheet on conclusion of examination.
10. **Use only Blue/Black Ball point pen.**
11. **Use of any calculator or log table etc., is prohibited.**
12. **There are no negative marks for incorrect answers.**

## परीक्षार्थियों के लिए निर्देश

1. इस पृष्ठ के ऊपर नियत स्थान पर अपना रोल नम्बर लिखिए।
2. इस प्रश्न-पत्र में पचास बहुविकल्पीय प्रश्न हैं।
3. परीक्षा प्रारम्भ होने पर, प्रश्न-पुस्तिका आपको दे दी जायेगी। पहले पाँच मिनट आपको प्रश्न-पुस्तिका खोलने तथा उसकी निम्नलिखित जाँच के लिए दिये जायेंगे, जिसकी जाँच आपको अवश्य करनी है :
   (i) प्रश्न-पुस्तिका खोलने के लिए पुस्तिका पर लगी कागज की सील को फाड़ लें। खुली हुई या बिना स्टीकर-सील की पुस्तिका स्वीकार न करें।
   (ii) **कवर पृष्ठ पर छपे निर्देशानुसार प्रश्न-पुस्तिका के पृष्ठ तथा प्रश्नों की संख्या को अच्छी तरह चैक कर लें कि ये पूरे हैं। दोषपूर्ण पुस्तिका जिनमें पृष्ठ/प्रश्न कम हों या दुबारा आ गये हों या सीरियल में न हों अर्थात् किसी भी प्रकार की त्रुटिपूर्ण पुस्तिका स्वीकार न करें तथा उसी समय उसे लौटाकर उसके स्थान पर दूसरी सही प्रश्न-पुस्तिका ले लें। इसके लिए आपको पाँच मिनट दिये जायेंगे। उसके बाद न तो आपकी प्रश्न-पुस्तिका वापस ली जायेगी और न ही आपको अतिरिक्त समय दिया जायेगा।**
   (iii) इस जाँच के बाद प्रश्न-पुस्तिका का नंबर OMR पत्रक पर अंकित करें और OMR पत्रक का नंबर इस प्रश्न-पुस्तिका पर अंकित कर दें।
4. प्रत्येक प्रश्न के लिए चार उत्तर विकल्प (1), (2), (3) तथा (4) दिये गये हैं। आपको सही उत्तर के वृत्त को पेन से भरकर काला करना है जैसा कि नीचे दिखाया गया है।

   **उदाहरण :** ① ② ● ④ जबकि (3) सही उत्तर है।
5. प्रश्नों के उत्तर **केवल प्रश्न पुस्तिका के अन्दर दिये गये OMR पत्रक पर ही** अंकित करने हैं। यदि आप OMR पत्रक पर दिये गये वृत्त के अलावा किसी अन्य स्थान पर उत्तर चिह्नांकित करते हैं, तो उसका मूल्यांकन नहीं होगा।
6. अन्दर दिये गये निर्देशों को ध्यानपूर्वक पढ़ें।
7. कच्चा काम (Rough Work) इस पुस्तिका के अन्तिम पृष्ठ पर करें।
8. यदि आप OMR पत्रक पर नियत स्थान के अलावा अपना नाम, रोल नम्बर, फोन नम्बर या कोई भी ऐसा चिह्न जिससे आपकी पहचान हो सके, अंकित करते हैं अथवा अभद्र भाषा का प्रयोग करते हैं, या कोई अन्य अनुचित साधन का प्रयोग करते हैं, जैसे कि अंकित किये गये उत्तर को मिटाना या सफेद स्याही से बदलना तो परीक्षा के लिये अयोग्य घोषित किये जा सकते हैं।
9. आपको परीक्षा समाप्त होने पर मूल OMR पत्रक निरीक्षक महोदय को लौटाना आवश्यक है और परीक्षा समाप्ति के बाद उसे अपने साथ परीक्षा भवन से बाहर न लेकर जायें। हालांकि आप परीक्षा समाप्ति पर मूल प्रश्न-पुस्तिका तथा OMR पत्रक की डुप्लीकेट प्रति अपने साथ ले जा सकते हैं।
10. **केवल नीले/काले बाल प्वाईंट पेन का ही प्रयोग करें।**
11. **किसी भी प्रकार का संगणक (कैलकुलेटर) या लाग टेबल आदि का प्रयोग वर्जित है।**
12. **गलत उत्तरों के लिए कोई नकारात्मक अंक नहीं हैं।**



www.examrace.com

# TAMIL
# தமிழ்
## PAPER - II
## தாள் - II

**Note :** This paper contains **fifty (50)** multiple choice questions, each question carrying **two (2)** marks. Attempt **all** the questions. **(50x2=100)**

**குறிப்பு :** இந்த வினாத்தாள் **ஐம்பது (50)** விடை தெரி வினாக்களைக் கொண்டது. ஒவ்வொரு வினாவுக்கும் உரிய மதிப்பெண்கள் **இரண்டு (2)**. **அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக. **(50x2=100)**

1. கிடப்புக் கோளி எனும் பொருண்மை உடையது :
   (1) இரண்டாம் வேற்றுமை (2) மூன்றாம் வேற்றுமை
   (3) நான்காம் வேற்றுமை (4) ஐந்தாம் வேற்றுமை

2. அது பற்றி எனக்குத் தெரியாது என்பதில் வரும் 'பற்றி' என்பது :
   (1) வேற்றுமை உருபு (2) முன்னுருபு
   (3) உவமவுருபு (4) பின்னுருபு

3. அப்புலிங்கம் இடம்பெற்றுள்ள தலம் :
   (1) திருவாரூர் (2) திருவானைக்கா
   (3) திருவண்ணாமலை (4) திருவிடைமருதூர்

4. அப்பூதியடிகளால் போற்றி வழிபடப்பட்டவர் :
   (1) திருநாவுக்கரசர் (2) திருஞானசம்பந்தர்
   (3) சுந்தரர் (4) மாணிக்கவாசகர்

5. 'அப்புப் பற்றாக்கை' எனும் மதிற்பொறி பற்றிக் கூறும் காப்பியம் :
   (1) சிலம்பு (2) மேகலை (3) பெருங்கதை (4) சிந்தாமணி

6. பாட்டி என்பது எதற்குரிய பெண் பெயர் ?
   (1) எருமை (2) மரை (3) பன்றி (4) பெற்றம்

7. உண்ணும்படி யானைக்கு எம்மொழியில் பாகர் கூறியதாக முல்லைப்பாட்டு குறிப்பிடுகிறது ?
   (1) வடமொழி (2) தென்மொழி (3) பிராகிருதம் (4) பாலி



www.examrace.com

8. பௌத்தம் கூறும் பிடகங்கள் :

(1) ஆறு (2) ஐந்து (3) நான்கு (4) மூன்று

9. 'செரு அடுதோள்' என்னும் பட்டப் பெயரால் குறிக்கப்படுபவர் :

(1) நல்லந்துவனார் (2) நல்லாதனார்

(3) நல்லச்சுதனார் (4) நல்லிறையனார்

10. இல்பொருள் உவமையின் வேறு பெயர் :

(1) பொது நீங்குவமை (2) கூடாவுவமை

(3) தொகையுவமை (4) அபூதவுவமை

11. வேற்றுமைக்கண் 'அம்' வரும் கிளவிகள் :

(a) ஆல் (b) பூல் (c) வேல் (d) கால்

**இவற்றுள்** :

(1) (a), (b), (d) சரி (2) (a), (c), (d) சரி

(3) (a), (b), (c) சரி (4) (a), (b), (c), (d) சரி

12. தொல்காப்பியர் புணர்ச்சியில் குறிப்பிடும் மரங்கள் :

(a) ஆண் (b) எகின் (c) ஒடு (d) சே

**இவற்றுள்** :

(1) (a), (b), (d) சரி (2) (a), (c), (d) சரி

(3) (a), (b), (c) சரி (4) (a), (b), (c), (d) சரி

13. ஓரடியில் நீதியை உரைக்கும் நூல்கள்.

(a) கொன்றை வேந்தன் (b) தண்டலையார் சதகம்

(c) வெற்றி வேற்கை (d) முதுமொழிக் காஞ்சி

**இவற்றுள்** :

(1) (a), (b), (d) சரி (2) (a), (c), (d) சரி

(3) (a), (b), (c) சரி (4) (a), (b), (c), (d) சரி

14. ஔவையார் இயற்றியவை :

(a) கல்வியொழுக்கம் (b) நல்வழி

(c) நன்னெறி (d) மூதுரை

**இவற்றுள்** :

(1) (a), (b), (d) சரி (2) (a), (c), (d) சரி

(3) (a), (b), (c) சரி (4) (a), (b), (c), (d) சரி



www.examrace.com

15. ஆடல் வல்லார் :

(a) பொருநர் (b) விறலியர் (c) கூத்தர் (d) பாணர்

**இவற்றுள்** :

(1) (a), (b), (d) சரி (2) (a), (c), (d) சரி

(3) (a), (b), (c) சரி (4) (a), (b), (c), (d) சரி

16. இராமச்சந்திரக் கவிராயர் இயற்றியவை :

(a) சகுந்தலை விலாசம் (b) அரிச்சந்திர விலாசம்

(c) பாரத விலாசம் (d) தாருக விலாசம்

**இவற்றுள்** :

(1) (a), (b), (d) சரி (2) (a), (c), (d) சரி

(3) (a), (b), (c) சரி (4) (a), (b), (c), (d) சரி

17. உமறுப்புலவரை ஆதரித்தோர் :

(a) சைகுத் தம்பி ஞானியார் சாஹிப்

(b) அப்துல் காசிம் மரைக்காயர்

(c) அப்துல் ஹமீத் பாகவி

(d) சீதக்காதி

**இவற்றுள்** :

(1) (a), (b) சரி (2) (c), (d) சரி (3) (b), (c) சரி (4) (b), (d) சரி

18. **உறுதிக் கூற்று (உ) :** சைவ சமயத்தில் தொகையடியார்கள் உளர்.

**காரணம் (கா) :** சைவ சமய அடியார்களாக நாயன்மார்கள் அறுபத்து மூவர் எனத் தொகை கூறுவது மரபு.

(1) **(உ)** சரி, **(கா)** சரி (2) **(உ)** சரி, **(கா)** சரியன்று

(3) **(உ)** சரியன்று, **(கா)** சரி (4) **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று

19. **உறுதிக் கூற்று (உ) :** கோஷ்டி பூசல், அறுவை சிகிச்சை ஆகியவற்றில் ஒற்று மிகுவதில்லை.

**காரணம் (கா) :** இவ்விரு சொற்களில் முறையே வருமொழி, நிலை மொழிகள் வடசொற்களாய் உள.

(1) **(உ)** சரி, **(கா)** சரி (2) **(உ)** சரி, **(கா)** சரியன்று

(3) **(உ)** சரியன்று, **(கா)** சரி (4) **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று



www.examrace.com

20. **உறுதிக்கூற்று (உ) :** பிள்ளைப்பெருமாள் ஐயங்காரை அழகிய மணவாள தாசர் என்பர்.

**காரணம் (கா) :** திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள அழகிய மணவாளருக்கே அடியவராய் இருந்தவர் அவர்.

(1) **(உ)** சரி, **(கா)** சரி (2) **(உ)** சரி, **(கா)** சரியன்று

(3) **(உ)** சரியன்று, **(கா)** சரி (4) **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று

21. **உறுதிக்கூற்று (உ) :** காலக் கிளவி என்பது உரிச்சொல்லின் வேறுபெயர் ஆகும்.

**காரணம் (கா) :** உரிச்சொல் எல்லாம் காலம் சுட்டிவரும்.

(1) **(உ)** சரி, **(கா)** சரி (2) **(உ)** சரி, **(கா)** சரியன்று

(3) **(உ)** சரியன்று, **(கா)** சரி (4) **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று

22. **உறுதிக்கூற்று (உ) :** முன்னிலையொருமை பன்மையொடு முடியும் நிலை சில வகை இலக்கியங்களில் உண்டு

**காரணம் (கா) :** அந்தாதி மருங்கில் போற்றல் வேண்டுவது அந்நிலை ஆகும்.

(1) **(உ)** சரியன்று, **(கா)** சரி (2) **(உ)** சரி, **(கா)** சரியன்று

(3) **(உ)** சரி, **(கா)** சரி (4) **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று

23. **உறுதிக்கூற்று (உ) :** பொருள்கோள்களுள் ஆற்றுநீர் என்பதும் ஒன்று.

**காரணம் (கா) :** மற்றைய நோக்காது செய்யுளில் அடிதோறும் வான்பொருள் அற்றற்று ஒழுகுதலும் உண்டு.

(1) **(உ)** சரியன்று, **(கா)** சரி (2) **(உ)** சரி, **(கா)** சரியன்று

(3) **(உ)** சரி, **(கா)** சரி (4) **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று

24. **உறுதிக்கூற்று (உ) :** அரச கேசரி தமிழில் இயற்றிய இரகுவம்சம் ஒரு பெருங்காப்பியம் ஆகும்.

**காரணம் (கா):** அறம், பொருள், இன்பம் ஆகியவற்றை உட்கொண்டது அது.

(1) **(உ)** சரியன்று, **(கா)** சரி (2) **(உ)** சரி, **(கா)** சரியன்று

(3) **(உ)** சரி, **(கா)** சரி (4) **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று



www.examrace.com

25. **உறுதிக்கூற்று (உ) :** இராமானுசர், திருப்பாவை ஜீயர், எனவும் அழைக்கப்பெறுகிறார்.

**காரணம் (கா) :** திருப்பாவைக்கு அவர் சிறந்த வியாக்கியானம் எழுதியுள்ளார்.

(1) **(உ)** சரி, **(கா)** சரியன்று (2) **(உ)** சரியன்று, **(கா)** சரி

(3) **(உ)** சரி, **(கா)** சரி (4) **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று

26. **உறுதிக்கூற்று (உ) :** சைவ சித்தாந்த சாத்திரங்களுள் 'கொடிக்கவி' என்பதும் ஒன்று.

**காரணம் (கா) :** தில்லையில் கொடியேற்றல் முறையில் சைவ சித்தாந்தக் கருத்துகளை அது விளக்குகிறது.

(1) **(உ)** சரி, **(கா)** சரியன்று (2) **(உ)** சரி, **(கா)** சரி

(3) **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று (4) **(உ)** சரியன்று, **(கா)** சரி

27. **உறுதிக்கூற்று (உ) :** காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு.

**காரணம் (கா) :** ஆக்கமும் கேடும் அதனால் வரும்.

(1) **(உ)** சரி, **(கா)** சரியன்று (2) **(உ)** சரி, **(கா)** சரி

(3) **(உ)** சரியன்று, **(கா)** சரி (4) **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று

28. நிரல்படுத்துக.

ஐங்குற்றங்கள் :

(a) அகங்காரம் (b) வெறுப்பு

(c) அவா (d) அவிச்சை (e) விழைவு

(1) (a) (c) (e) (b) (d)

(2) (b) (a) (d) (e) (c)

(3) (c) (a) (d) (e) (b)

(4) (d) (a) (c) (e) (b)

29. நிரல்படுத்துக.

கேடு தருவன :

(a) கிளி (b) விட்டில் (c) பெரும்புயல் (d) நால்வாய்

(1) (a) (c) (b) (d)

(2) (b) (a) (d) (c)

(3) (c) (a) (d) (b)

(4) (d) (a) (c) (b)



www.examrace.com

30. நிரல்படுத்துக.

இரட்சணிய யாத்திரிகத்தின் பருவங்கள் :

(a) குமார பருவம்

(b) இரட்சணிய பருவம்

(c) ஆதி பருவம்

(d) நிதான பருவம்

(e) ஆரணிய பருவம்

(1) (a) (c) (e) (b) (d)

(2) (b) (a) (d) (e) (c)

(3) (c) (a) (d) (e) (b)

(4) (d) (a) (c) (e) (b)

31. நிரல்படுத்துக.

ஐந்தொகை :

(a) வரவு (b) இருப்பு (c) முதல் (d) ஆதாயம் (e) செலவு

(1) (c) (a) (e) (b) (d)

(2) (b) (a) (d) (e) (c)

(3) (c) (a) (d) (e) (b)

(4) (d) (a) (c) (e) (b)

32. நிரல்படுத்துக.

இரண்டு முதல் ஐந்து அறிவு உடையவை :

(a) சிதல் (b) மா (c) நந்து (d) தும்பி

(1) (a) (c) (b) (d)

(2) (b) (a) (d) (c)

(3) (c) (a) (d) (b)

(4) (d) (a) (c) (b)

33. நிரல்படுத்துக.

ஆண்பால் பிள்ளைத்தமிழின் இறுதி நான்கு பருவங்கள் :

(a) சிற்றில் (b) அம்புலி (c) சிறுதேர் (d) சிறுபாறை

(1) (a) (c) (b) (d)

(2) (b) (a) (d) (c)

(3) (c) (a) (d) (b)

(4) (d) (a) (c) (b)



www.examrace.com

34. நிரல்படுத்துக :

(a) தோய்ந்து சிவந்தது மின்னார் நெடுங்கண் தொலைவில் பன்னூல்

(b) ஈந்து சிவந்தது மால் சீதக்காதி இருகரமுமே

(c) ஆய்ந்து சிவந்தது பாவாணர் நெஞ்சம் அனுதினமும்

(d) காய்ந்து சிவந்தது சூரிய காந்தி கலவியிலே

(1) (a) (c) (b) (d)

(2) (b) (a) (d) (c)

(3) (c) (a) (d) (b)

(4) (d) (a) (c) (b)

35. நிரல்படுத்துக :

(a) என்றும் சிறியார்கண் என்னானும் தோன்றாதாம்

(b) குன்றின்மேல் இட்ட விளக்கு

(c) கன்றி முதிர்ந்த கழியப் பன்னாள் செயினும்

(d) ஒன்றாய் விடினும் உயர்ந்தார்ப் படும் குற்றம்

(1) (a) (c) (b) (d)

(2) (b) (a) (d) (c)

(3) (c) (a) (d) (b)

(4) (d) (a) (c) (b)

36. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | பொய்கையாழ்வார் | (i) | காலிங்கம் |
| (b) | பெரியாழ்வார் | (ii) | சுதர்சனம் |
| (c) | திருமழிசையாழ்வார் | (iii) | பாஞ்ச சன்யம் |
| (d) | திருமங்கையாழ்வார் | (iv) | கருடன் |

| | **(a)** | **(b)** | **(c)** | **(d)** |
|---|---|---|---|---|
| (1) | (iii) | (i) | (iv) | (ii) |
| (2) | (iii) | (iv) | (ii) | (i) |
| (3) | (iii) | (i) | (ii) | (iv) |
| (4) | (iii) | (ii) | (i) | (iv) |



www.examrace.com

37. பொருந்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் | (i) | குடங்கருள் பாம்போடு உடனுறைந்தற்று |
| (b) | களித்தானைக் காரணம் காட்டுதல் | (ii) | வளர்வதன் பாத்தியுள் நீர் சொரிந்தற்று |
| (c) | உடம்பாடு இலாதவர் வாழ்க்கை | (iii) | கீழ்நீர்க் குளித்தானை தீத்துரீஇயற்று |
| (d) | உணர்வதுடையார்முன் சொல்லல் | (iv) | நன்பால் கலம் தீமையால் திரிந்தற்று |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iv) | (iii) | (i) | (ii) |
| (2) | (iv) | (i) | (ii) | (iii) |
| (3) | (ii) | (iii) | (i) | (iv) |
| (4) | (ii) | (iv) | (iii) | (i) |

38. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | சக்தி வைத்தியம் | (i) | எம்.வி. வெங்கட்ராம் |
| (b) | அப்பாவின் சிநேகிதர் | (ii) | தி. ஜானகிராமன் |
| (c) | குற்றாலக் குறவஞ்சி | (iii) | அசோக மித்திரன் |
| (d) | காதுகள் | (iv) | கோவி. மணிசேகரன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iv) | (iii) | (i) | (ii) |
| (2) | (iv) | (i) | (ii) | (iii) |
| (3) | (ii) | (iii) | (iv) | (i) |
| (4) | (ii) | (iv) | (iii) | (i) |

39. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | திருவாசகம் | (i) | ந.மு. வேங்கடசாமி நாட்டார் |
| (b) | திருக்குறள் | (ii) | கா.சு. பிள்ளை |
| (c) | சிலப்பதிகாரம் | (iii) | ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை |
| (d) | புறநானூறு | (iv) | பாவாணர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iv) | (iii) | (i) | (ii) |
| (2) | (iv) | (i) | (ii) | (iii) |
| (3) | (ii) | (iii) | (iv) | (i) |
| (4) | (ii) | (iv) | (i) | (iii) |



www.examrace.com

40. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | சிந்தாமணி | (i) | மான் தூது |
| (b) | பெருங்கதை | (ii) | கிளித் தூது |
| (c) | நளவெண்பா | (iii) | முகில் தூது |
| (d) | மாரிவாயில் | (iv) | அன்னத் தூது |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iv) | (iii) | (i) | (ii) |
| (2) | (ii) | (i) | (iv) | (iii) |
| (3) | (iii) | (iv) | (ii) | (i) |
| (4) | (ii) | (iv) | (i) | (iii) |

41. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | திருவிருத்தம் | (i) | யசுர் வேதம் |
| (b) | திருவாசிரியம் | (ii) | இருக்கு வேதம் |
| (c) | பெரிய திருவந்தாதி | (iii) | அதர்வண வேதம் |
| (d) | திருவாய்மொழி | (iv) | சாம வேதம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iv) | (iii) | (i) | (ii) |
| (2) | (ii) | (i) | (iv) | (iii) |
| (3) | (iii) | (iv) | (ii) | (i) |
| (4) | (ii) | (iv) | (i) | (iii) |

42. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | திருவருணையந்தாதி | (i) | நக்கீரர் |
| (b) | திருநூற்றந்தாதி | (ii) | சேரமான் பெருமாள் |
| (c) | பொன்வண்ணத்தந்தாதி | (iii) | எல்லப்ப நாவலர் |
| (d) | கயிலை பாதி காளத்தி பாதியந்தாதி | (iv) | அவிரோத நாதர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iv) | (iii) | (i) | (ii) |
| (2) | (ii) | (i) | (iv) | (iii) |
| (3) | (iii) | (iv) | (ii) | (i) |
| (4) | (ii) | (iv) | (i) | (iii) |



www.examrace.com

43. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | சிவஞான முனிவர் | (i) | உமாபதி சிவாச்சாரியார் |
| (b) | மெய்கண்ட தேவர் | (ii) | ஆளுடைய தேவநாயனார் |
| (c) | மறைஞான தேசிகர் | (iii) | அருணந்தி சிவாச்சாரியார் |
| (d) | உய்யவந்த தேவநாயனார் | (iv) | கச்சியப்ப முனிவர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iv) | (iii) | (i) | (ii) |
| (2) | (ii) | (i) | (iv) | (iii) |
| (3) | (iii) | (iv) | (ii) | (i) |
| (4) | (ii) | (iv) | (i) | (iii) |

44. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | விசயாலயன் | (i) | பெரியகோயில் கண்டான் |
| (b) | இராசராசன் | (ii) | தஞ்சை மீட்டான் |
| (c) | இராசேந்திரன் | (iii) | கல்லணை கண்டான் |
| (d) | கரிகாலன் | (iv) | கங்கை கொண்டான் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iv) | (iii) | (i) | (ii) |
| (2) | (ii) | (iv) | (i) | (iii) |
| (3) | (iii) | (iv) | (ii) | (i) |
| (4) | (ii) | (i) | (iv) | (iii) |

45. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | வித்தியா விசாரிணி | (i) | சி.வை. தாமோதரம்பிள்ளை |
| (b) | தத்துவ போதினி | (ii) | குலாம் காதிர் நாவலர் |
| (c) | தினவர்த்தமானி | (iii) | பெர்சிவல் |
| (d) | தினவர்த்தினி | (iv) | காசி விசுவநாத முதலியார் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iv) | (iii) | (i) | (ii) |
| (2) | (ii) | (iv) | (i) | (iii) |
| (3) | (iii) | (iv) | (ii) | (i) |
| (4) | (ii) | (i) | (iv) | (iii) |



www.examrace.com

**46-50** பின்வரும் கவிதையைப் படித்து, அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடைதருக.

தானியம் விதைத்தார்கள் தாதுவருஷத்தில்
சீமையில் மழை மாரி பூச்சிய மாகவே
தீய்ந்து பயிரெல்லாம் காய்ந்ததையா
அரைக்கீரை, சோளம் சிறுநெல்லு கம்புக்கு
காரண மானதோர் புதன் சந்தையில்லை
எட்டு வள்ளம் விற்று இரண்டு வள்ள மாகி
துட்டமான பேர்களை மட்டடக்கி
தட்டுப்படா துதைத்து வள்ளத்தில் வைத்து
கொட்டுப் பட்டாற் போல நிறுத்திற்றுமே

மாதமாம் தீபாவளிப் பண்டிகை வந்தது
ஆனபேர் களிப்புடன் கொண்டாட முடியாமல்
நோம்புகள் போச்சுதே ஐயையோ கம்பு
கார்த்திகை மாதத்தில் முக்கால் வள்ளம்கூட
காணமுடியாமல் நாங்களும் தெம்பற்றோம்
காட்டை யழுது பயிரிடும் காராளக்
கவுண்ட ரெல்லாம் கவலேத்த மாட்டினை
தேடியே கட்டை வண்டியில் கட்டி
ஓடரோம் தூரதேசமும் என்றாரே
போயங்கு தவசம் பிடித்திடக் கையில்
ஈயக் காசுக்கும் ஏதும் வழியில்லை
பூமியைக் கொதவு வைத்தாலும் ஆங்கே
பூரண காசுகள் தந்திடுவாரில்லை
காப்புக் கடகமும் தோள் வெண்டயமும்
காதுக் கொப்பு சில்லரை தாலியெல்லாம் விற்றாலும்
கட்டாது அந்த ரூபாயெல்லாம் உமக்கு
கவலை ஏத்த மாட்டு தீனிக்கே மட்டும்
பத்தாததிற்கு பணம் வேண்டும் என்றுமே
ஆடு மாடெல்லாம் விற்றெடுத்துக் கொண்டு
ஆறுபேர் ஏழுபேர் நாம் சேர்ந்து நல்ல

கும்பகோணம் தஞ்சாவூர் போவது என்றால்
புழுத்த சோளம் கம்பு புளிச்சகீரை தின்ன


www.examrace.com

புடிச்சுமே காலரா போகும் எட்டுப் பேரில்
மூன்றுபேர் இரண்டுபேர் மூச்சுப் பிழைப்பார்கள்
எல்லாம் சிவன் செயல் என்றிடு வாரெல்லாம்
தினுசு வேலைகள் எட்டுமே செய்குவார்
சீமைகள் எங்கும் சுற்றித் திரிகுவார்
சோளச்சோறு வாயுக்கு சேராதென்று சொன்ன
சொகுசான மகராச மக்களுகளெல்லாம்
மழுங்கலாய் துட்டுக்கு புண்ணாக்கு வாங்கியே
மறைவுக்குப் போவாராம் உண்பதற்கே
புழுங்கலரசிச் சாதம் சேராதுன்னு சொன்ன
புண்ணிய மகராச மக்களுகளெல்லாம்
மலைக் கத்தாழைக் குருத்தினைப் பிடுங்கியே
மண்திட்டு மறைவிலே மடுக்கிண்ணு கடிப்பாராம்
எப்பத்தான் நமக்கு காலம் செழிக்குமோ
உப்போ பணத்துக்கு இரண்டு படிவிலை
ஊருக் கிணத்திலே தண்ணியில்லை
நமக்கு எப்பவே காலம் செழிக்குமென்றால் துரைக்கு
அப்பவே விண்ணப்பம் போடலா மென்றார்.

**46.** தாது ஆண்டில் ஒருபடி உப்பின் விலை :

(1) கால் பணம் (2) அரைப்பணம்

(3) முக்கால் பணம் (4) ஒரு பணம்

**47.** மகராச மக்கள் உண்டவை :

(a) கற்றாழைக் குருத்து (b) சோளம்

(c) புண்ணாக்கு (d) கம்பு

**இவற்றுள் :**

(1) (a), (b) சரி (2) (b), (c) சரி (3) (a), (c) சரி (4) (b), (d) சரி

**48.** **உறுதிக்கூற்று (உ) :** பயிர்கள் தீய்ந்தும் காய்ந்தும் போயின.

**காரணம் (கா) :** மழை மாரி பூச்சியமாகவில்லை.

(1) **(உ)** சரி, **(கா)** சரியன்று (2) **(உ)** சரியன்று, **(கா)** சரி

(3) **(உ)** சரி, **(கா)** சரி (4) **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று



www.examrace.com

**49.** நிரல்படுத்துக.

புதன் சந்தையில் கிடைத்தவை :

(a) கம்பு (b) சோளம் (c) சிறுநெல் (d) அரைக்கீரை

| | | | | |
|---|---|---|---|---|
| (1) | (d) | (b) | (a) | (c) |
| (2) | (d) | (b) | (c) | (a) |
| (3) | (d) | (c) | (b) | (a) |
| (4) | (d) | (a) | (b) | (c) |

**50.** பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | கடகம் | (i) | சில்லரை |
| (b) | வெண்டயம் | (ii) | காது |
| (c) | கொப்பு | (iii) | காப்பு |
| (d) | தாலி | (iv) | தோள் |

| | **(a)** | **(b)** | **(c)** | **(d)** |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (i) | (iv) | (iii) |
| (2) | (ii) | (iv) | (i) | (iii) |
| (3) | (iii) | (i) | (iv) | (ii) |
| (4) | (iii) | (iv) | (ii) | (i) |

- o O o -



www.examrace.com

**Space For Rough Work**



www.examrace.com

**Space For Rough Work**



www.examrace.com